# எம்.டி.சி.ஆர்.சி., சார்பில் அன்னையர் தின விழா

**கோவை, ஜூன் 3-**

எம்.டி.சி.ஆர்.சி., தன்னார்வ அமைப்பு சார்பில், அன்னையர் தின விழா ராமநாதபுரம், ஆர்ய வைத்திய பார்மசியில் நடந்தது.

எம்.டி.சி.ஆர்.சி., தலைவர் லட்சுமி தலைமை வகித்து பேசியதாவது:

உலகில், 3,500 குழந்தைகளில், ஒரு குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. மரபு வழியாக பரவும் இந்த நோய் ஆண் குழந்தைகளுக்கே அதிகளவில் தாக்குகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தமிழக அரசுடன் இணைந்து சிகிச்சை வழங்குகிறோம். குறிப்பாக, 'டுசீன்' தசை சிதைவால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, 12 ஆண்டுகளாக சிகிச்சை வழங்குகிறோம். மரபணு பரிசோதனை கலந்தாய்வு, பல்துறை மருத்துவ முகாம், குடும்ப ஆதரவு சேவைகள் அனைத்தும் இங்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

இவ்வாறு, அவர் கூறினார். பிரபல பேச்சாளர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன், குறிஞ்சி மருத்துவமனை தலைவர் ராமசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.